27.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வடகிழக்குப் பருவ மழை; கிராம அளவில் குழுக்களை அமைக்க ஆட்சியர் அறிவுறுத்தல்

வடகிழக்குப் பருவ மழை காலத்தில் பேரிடர் விவரங்களை உடனுக்குடன் தெரிவிக்கும் வகையில் கிராம அளவில் தன்னார்வக் குழுக்களை அமைக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் மு.ஆசியா மரியம் அறிவுறுத்தினார்.

நாமக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலத்தில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஆட்சியர் மு.ஆசியா மரியம் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் ஆட்சியர் பேசியது: வருவாய்த் துறையினர் பருவமழை காலங்களில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பேரிடர் விவரங்களை உடனுக்குடன் தெரிவிக்க கிராம, வட்டார, வட்ட அளவிலான குழுக்களை அமைத்து அதன் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களைத் தங்க வைக்க ஏதுவாக பள்ளிக் கட்டடங்கள் மற்றும் சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்கள் ஆகியவற்றில் குடிநீர், மின்சாரம், கழிவறை வசதிகள் குறித்து ஆய்வு செய்து தயார் நிலையில் வைக்க வேண்டும்.

மழைக் காலங்களில் அனைத்து சமுதாயக் கூடங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகளின் சாவிகளை சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் வசம் பெற்று வைத்துக் கொள்ள வேண்டும். தீயணைப்புத் துறையினர் போதுமான உபகரணங்களுடன் தேவையான படகுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டது.

பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஏரி, குளம், நீர்த்தேக்கம், கால்வாய்கள் ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி, தண்ணீர் வெளியே செல்வதற்கும் தடை ஏதும் இல்லாத நிலையை ஏற்படுத்தி வைக்க வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறையினர் போதுமான சாலைப் பணியாளர்கள், மரம் அறுக்கும் இயந்திரம், லாரி போன்ற வாகனங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், மற்றும் சாலைகளை சீரமைக்கவும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

பொது சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறையினர் மற்றும் கால்நடைத் துறையினர் தொற்று நோய் வராமல் தடுக்க தேவையான அனைத்து உயிர் காப்பு மருந்துகளை போதுமான அளவு இருப்பில் உள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ளவும், நியமிக்கப்பட்ட பணி நேர மருத்துவர்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்குமாறு கண்காணிக்கவும் வேண்டும்.

மின்வாரியத் துறையினர் மழைக் காலங்களில் மின் கம்பங்கள் சாய்ந்தாலோ, மின் கம்பிகள் அறுந்து விழுந்தாலோ, போர்க்கால அடிப்படையில் சரிசெய்யவும், அத்தியாவசியத் தேவை ஏற்படும்பட்சத்தில் மட்டுமே மழைக் காலங்களில் மின்நிறுத்தம் செய்யவும் வேண்டும்.

செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் பொதுமக்களுக்குத் தேவையான முன்னெச்சரிக்கை மற்றும் விழிப்புணர்வு குறித்த செய்திகளை உள்ளூர் தொலைக்காட்சி, திரையரங்குகள் மூலமாகத் தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து துறை அலுவலர்களும் பருவமழைக் காலங்களில் ஏற்படும் சேதங்கள் மற்றும் பாதிப்புகள், வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் குறித்து மாவட்ட அவசர கால மையத்தில் உள்ள 1077 என்ற இலவச தொலைபேசி எண் மூலம் உடனுக்குடன் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றார்.

மாவட்ட வருவாய் அலுவலர் கு.பழனிச்சாமி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித் துணை ஆட்சியர் நா.பாலச்சந்திரன், கோட்டாட்சியர்கள் எம்.ராஜசேகரன், ஜி.மகாத்மா, பேரிடர் மேலாண்மை தனி வட்டாட்சியர் சசிகலா உள்பட வருவாய்

வட்டாட்சியர்கள், அரசுத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## செப். 1 முதல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

தஞ்சாவூர் மாவட்டத்தில் செப். 1-ம் தேதி முதல் 21 நாள்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெறவுள்ளது என்றார் ஆட்சியர் ஆ. அண்ணாதுரை.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரகத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் அண்மையில் நடைபெற்ற திட்டப் பங்களிப்பு துறைகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அவர் பேசியது: மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் கீழ், 11-வது சுற்று தடுப்பூசி போடும் பணி செப். 1-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதற்காக மாவட்டத்தில் 76 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள், 3.86 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசிப்போட உள்ளன.

இத்திட்டத்தில் அனைத்து கால்நடைகளும் பயன்பெறும் வகையில் ஊராட்சித் தலைவர்கள் தங்களது ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய வேண்டும் என்றார் ஆட்சியர். கூட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ராஜசேகரன், ஆவின் மேலாளர் காமராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்

தேனி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் செப்.1 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை கால்நடைகளுக்கு வாய்க்கானை நோய் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது.

அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளிலும் நடைபெறும் முகாம்களில் காலை 6 மணி முதல் 9 மணி வரையும், பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரையும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படும். முகாம் நடைபெறும் இடம் சமந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மூலம் அறிவிக்கப்படும். விவசாயிகள் தங்களது கால்நடைகளை முகாமுக்கு கொண்டு வந்து வாய்க்கானை நோய் தடுப்பூசி போடலாம் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

## காரைக்குடிப் பகுதியில் இடி, மின்னல், காற்றுடன் பலத்த மழை

காரைக்குடிப் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலையில் இடி, மின்னல், காற்றுடன் பலத்தமழை பெய்தது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாக வெயில் கொளுத்தியது. இதனால் நகரில் வெப்பம் அதிகரித்து மக்கள் அவதிப்பட்டுவந்தனர். வெள்ளிக்கிழமை பகலில் வெயில் வாட்டியது. மதியம் மேகமூட்டம் ஏற்பட்டு மாலை 5.15 மணியளவில் லேசான மழை பெய்யத்தொடங்கி பலத்த மழையாக சுமார் 1 மணிநேரம் பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக் கெடுத்து ஓடியது. வாகனங்கள் மெதுவாக சென்றன.

மேலும் காரைக்குடிநகர் கல்லூரிச்சாலையில் மரம் ஒன்று சாலையின் நடுவே சாய்ந்தது. காரைக்குடி அருகே புதுவயல், சாக்கோட்டை, பள்ளத்தூர், செட்டிநாடு, கானாடுகாத்தான், கோட்டையூர் உள்ளிட்ட காரைக்குடி சுற்றுவட்டாரங்களிலும் பலத்த மழை பெய்தது. பலத்த காற்று வீசியதால் மின்வயர்கள் பல்வேறு இடங்களில் துண்டிக்கப்பட்டதால் மின்சாரம் நீண்ட நேரமாக தடைபட்டது. அதனை மின்சாரவாரியத்தினர் சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர்.

## கல்லலில் விவசாய பணிகள் தொடக்கம்

சிவகங்கை மாவட்டம் கல்லல் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் விவசாய பணிகள் தொடங்கியுள்ளது.

சிவகங்கை மாவட்டம் கல்லல் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு பெய்த மழையைத் தொடர்ந்து, அப்பகுதியில் விவசாயிகள் விவசாயப் பணிகளைத் தொடங்கியுள்ளனர். கல்லல் ஒன்றியத்தில் கடந்த ஆண்டு 8 ஆயிரம் எக்டேரில் நெல் விவசாய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆண்டு 8,700 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செவரக்கோட்டை, மானகிரி, மாலைகொண்டான் உள்ளிட்ட பகுதிகளில் 350 எக்டேரில் இயந்திர நேரடி நெல் விதைப்பு பணிகள் வேளாண் துறையால் தொடங்கப்பட்டுள்ளது. சாத்தம்பத்தி, சன்னவனம், விசாலயன்கோட்டை, எழுமாப்பட்டி, ஆலங்குடி, எஸ்.ஆர்.பட்டணம்,

குருந்தம்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் விதைப்பு பணியை மேற்கொண்டுள்ளனர்.

**பர்லியாறு அரசு தோட்டக் கலை பண்ணையில் துரியன் பழ சீசன் துவக்கம்**

மேட்டுப்பாளையம், உதகை சாலையில் கல்லாறை அடுத்துள்ள பர்லியாறு அரசு தோட்டக் கலைப் பண்ணையில் துரியன் பழ சீசன் துவங்கியதையடுத்து, அப் பழங்களை சுற்றுலாப் பயணிகளும், பொதுமக்களும் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

மேட்டுப்பாளையத்தை அடுத்த பர்லியாறு பகுதியில் அமைந்துள்ளது அரசு தோட்டக் கலைப் பண்ணை. இங்கு பலாப் பழம், மங்குஸ்தான், ஜாதிக் காய் உள்ளிட்ட பழ வகைகளும், பல்வேறு மரவகை நாற்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது இங்கு மருத்துவ குணம் கொண்ட துரியன் பழங்களின் சீசன் துவங்கியுள்ளது.

மலேசியாவைத் தாயகமாகக் கொண்ட இந்த துரியன் பழம், தமிழகத்தில் நீலகிரி மலைத் தொடரில், ஆண்டுதோறும் குளிர் நிலவக் கூடிய பர்லியாறு பகுதியில் மட்டுமே பயிர் செய்யப்பட்டு வருகிறது.

இங்குள்ள அரசு தோட்டக் கலைப் பண்ணையில் சுமார் 80-க்கும் மேற்பட்ட மரங்களில் இந்தப் பழம் நன்கு காய்த்துள்ளது. இயற்கையான சூழ்நிலையில் சுமார் 5 கிலோ வரை வளரும் தன்மை கொண்ட இந்தப் பழம் பார்ப்பதற்கு பலாப் பழத்தைப் போலவே தோற்றமளிக்கிறது. இந்தப் பழத்தில் பி.சி.இ. வைட்டமின் சத்துகளுடன், இதர புரத சத்துகளும் நிறைந்திருப்பதால், இந்தப் பழத்தை வாங்க உதகை வரும் சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, இந்தப் பழத்தில் உயிரணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் திறன் உள்ளதாக நம்பப்படுவதால், குழந்தைப் பேறு இல்லாத தம்பதியினர் இப்பழத்தை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

துரியன் பழ சீசன் ஜூலை முதல் செப்டம்பர் வரை இருக்கும் என்பதால் தற்போது இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. தற்போது இந்தப் பழம் பர்லியாறு அரசு தோட்டக் கலைப் பண்ணையில் கிலோ ரூ.700 முதல் ரூ.800 என்ற விலையில் விற்கப்பட்டு வருகிறது.

**மண் பரிசோதனை, பயிர்வள பாதுகாப்பு ஆலோசனை முகாம்**

காரமடையை அடுத்த தேவனாபுரம் ஸ்ரீஅவினாசிலிங்கம் வேளாண் அறிவியல் மையத்தில் மண் வளம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மண் பரிசோதனை, பயிர்வளப் பாதுகாப்பு ஆலோசனை முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கோவை, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திற்கு உள்பட்ட வேளாண் அறிவியல் நிலையத்தில் ஹைதராபாத், தேசிய வேளாண் கழகத்தைச் சேர்ந்த 6 வேளாண் விஞ்ஞானிகளை கொண்ட குழுவினர், கிராம அனுபவப் பயிற்சியைப் பெறுவதற்காக வந்துள்ளனர்.

இக்குழுவினர், காரமடை அருகே சாலைவேம்பு கிராமத்தை தேர்வு செய்து, அந்தக் கிராமம் குறித்த தகவல்களை சேகரித்தல், கிராம மக்களின் வாழ்வாதாரம், கிராம நீர்நிலைகள், விவசாய நிலங்கள், பயிர் வகைகள் குறித்த தகவல்களைச் சேகரிக்கும் பணியில் கிராம மக்கள் உதவியுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் முதல் கட்டமாக, மண் வளம் குறித்த தகவல்களை அறியும் வகையில் மண் பரிசோதனை மற்றும் பயிர்வளப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு முதுநிலை விஞ்ஞானி குமாரவடிவேலு தலைமை வகித்தார். கிராம ஊர்கவுடர் ராமசாமி, வார்டு உறுப்பினர் ரங்கராஜ் முன்னிலைவைத்தனர். தோட்டக்கலை நிபுணர் மகாதேவன் வரவேற்றார்.

இதில், கிராமங்களில் பெற்ற அனுபவப் பயிற்சி குறித்து தேசிய வேளாண் அபிவிருத்திக் கழக முதுநிலை விஞ்ஞானி வெங்கடேசன், விஞ்ஞானிகள் ரஞ்சனி, பாக்யலட்சுமி, ஜாக்ரிதி ரோஹித், ரஞ்சித் முசுந்தர், சையத் இம்ரான், நிதீஸ் ரத்தன்பரத்வாஜ் ஆகியோர் பேசினர்.

விவசாயிகளுக்கு, நிலத்தின் மண் வளம் குறித்த அட்டைகள் வழங்கப்பட்டு, பயிர்வளம் குறித்த ஆலோசனையும் வழங்கப்பட்டது. வேளாண் அறிவியல் நிலைய கால்நடை நிபுணர் ராஜு, உழவியல் நிபுணர் சுரேஷ்குமார், முன்னணி

விவசாயிகள் கந்தசாமி, ரங்கராஜ், பத்திரப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர். வேளாண் நிலைய மண் வள ஆராய்ச்சியாளர் சுகந்தி நன்றி கூறினார்.

## அவிநாசியில் விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்

அத்திக்கடவு -அவிநாசி விவசாய சங்க ஆலோசனைக் கூட்டம் அவிநாசியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, பாரதிய கிசான் சங்க மாவட்டத் தலைவர் வேலுசாமி தலைமை வகித்தார். பொறுப்பாளர்கள் தொரவலூர் சம்பத், சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக விவசாய சங்க ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி.ஆர்.பாண்டியன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில், கர்நாடகத்தில் இருந்து காவிரி நீரை மத்திய, மாநில அரசுகள் உடனடியாக பெற்றுத் தரவேண்டும். காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் பங்கீட்டு ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றை அமைக்க வேண்டும்.

நீர் பாசனத்துக்கு என்று பாசனத் துறை ஏற்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆகஸ்ட் 30-ஆம் தேதி நடைபெறும் தமிழகம் தழுவிய முழு அடைப்பு போராட்டத்தில் அனைத்து விவசாயிகளும் பங்கேற்பது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நீர், மண் பரிசோதனை முக்கியத்துவம் விளக்கம்

கிருஷ்ணகிரியில் மண், நீர் பரிசோதனை செய்வதின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை அலுவலர்கள் விளக்கமளித்தனர். கிருஷ்ணகிரி மக்கள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்க வருகை தந்த விவசாயிகளுக்கு, நடமாடும் மண் பரிசோதனை நிலையத்தின் மூலம் மண், நீர் பரிசோதனை செய்வதின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மண் மாதிரி எடுப்பதின் நோக்கம், மண் மாதிரி எவ்வாறு எடுப்பது, மாதிரி எடுக்கும் காலம், தவிர்க்க வேண்டிய இடங்கள், ஆழம், மண் மாதிரியுடன் அனுப்ப வேண்டிய விவரங்கள், பகுத்தல் முறையில் ஒரு மண் மாதிரிக்கான ஆய்வுக் கட்டணம் ரூ.20 மற்றும் பாசன நீர் விரிவான ஆய்வுக் கட்டணம் ரூ.20

ஆகியவற்றை செலுத்தி, தங்கள் மாதிரிகளை பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என விளக்கப்பட்டது. மேலும், உரச்செலவைக் குறைத்து கூடுதல் மகசூல் பெறலாம் என வேளாண் அலுவலர்கள் இளையராஜா, குமார் ஆகியோர் விளக்கினர். தொடர்ந்து, விவசாயிகளுக்கு மண் மற்றும் நீர் பரிசோதனை செய்வதின் முக்கியத்துவம் குறித்த துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டது.

## சேலம் மாவட்டத்தில் 248 மி.மீ. மழை பதிவு

சேலம் மாவட்டத்தில் வியாழக்கிழமை இரவு சுமார் 248 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பெய்தது.

சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பகலில் வெயில் தாக்கம் அதிகமாக இருந்து வருகிறது. அதேபோல, இரவு நேரங்களில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

இந்தநிலையில், வியாழக்கிழமை இரவு திடீரென மழை பெய்தது. சேலம் நகரிலும், ஏற்காடு மலை அடிவாரம், அஸ்தம்பட்டி உள்ளிட்ட ஒரு சில இடங்களிலும் பலத்த மழை பெய்தது.

அதேபோல, சுற்றுலா தலமான ஏற்காட்டில் அதிகபட்சமாக 72 மில்லி மீட்டர் மழை பெய்தது.

பலத்த மழை காரணமாக மஞ்சக்கோட்டை, காவேரி தேக்கு உள்ளிட்ட கிராமங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதனால் அப்பகுதி மலை கிராம மக்கள் மின்சாரம் இல்லாமல் அவதிக்குள்ளாகினர்.

சேலம் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்):

ஏற்காடு -72, பெத்தநாயக்கன்பாளையம்-48, ஆனைமடுவு-27, ஆத்தூர்-23, வீரகனூர்-19, வாழப்பாடி-16, கெங்கவல்லி, சங்ககிரி-9, ஓமலூர், கரியகோவில்-7, மேட்டூர்-4 என மாவட்டத்தில் மொத்தம் 248 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பதிவாகி உள்ளது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 69 அடியாக உயர்வு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 69 அடியாக உயர்ந்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வியாழக்கிழமை காலை நொடிக்கு 9,239 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 68.98 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 31.83 டி.எம்.சி.யாக இருந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் அணையிலிருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கும் வாய்ப்பு பிராசமாக உள்ளது என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஆய்வு

மயிலாடுதுறை பகுதிகளில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பொது மேலாளர் (சந்தை) வி. ஆனந்தகுமார் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

நடப்பு குருவை சாகுபடி பருவத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக, மயிலாடுதுறை வருவாய்க் கோட்டத்துக்குள்பட்ட மயிலாடுதுறை, குத்தாலம், தரங்கம்பாடி, சீர்காழி ஆகிய 4 வட்டங்களில் 33 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த கொள்முதல் நிலையங்களில் அதிகாரிகள் 3 பேர் கொண்ட 11 குழுக்களாகப் பிரிந்து வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தனர்.

இந்நிலையில், மயிலாடுதுறை வட்டம், மறையூரில் செயல்பட்டு வரும் நேரடி கொள்முதல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட வி. ஆனந்தகுமார், கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை இருப்பு வைக்காமல், உடனடியாக சேமிப்பு கிடங்குகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் ஆனந்தகுமார் கூறியது:

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டறியும் வகையில், இந்த திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

நாகை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால், நெல்லின் ஈரப்பத அளவை 17-லிருந்து 19 ஆக உயர்த்தித் தர வேண்டும் என விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது. இதுதொடர்பாக, நாகை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்தாய்வு செய்யப்படும்.

இதேபோல், விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்குரியத் தொகை தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கிளையின் மூலமே வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார். முன்னதாக, கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல் மூட்டைகள், எடை இயந்திரம், ஈரப்பதம் அளவீட்டுக் கருவி ஆகியவற்றை ஆனந்தகுமார் ஆய்வு செய்தார். ஆய்வின்போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மாவட்ட மேலாளர் (தர ஆய்வு) ராஜ்மோகன், துணை மேலாளர் (கொள்முதல்) எஸ். சேகர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்

## பெங்களூரில் நாளை இயற்கை உணவுத் திருவிழா

பெங்களூரு ஜே.பி.நகரில் ஞாயிற்றுக்கிழமை (ஆக.28) இயற்கை உணவுத் திருவிழா நடைபெறுகிறது.

இதுகுறித்து உணவுத் திருவிழாவின் ஒருங்கிணைப்பாளரும், நம்ம அட்டா குழுமத்தின் தலைவருமான விவேக் எஸ்.பாட்டீல் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

தகவல், உயிரித் தொழில்நுட்பத்தின் தலைநகரமான பெங்களூரில் இயற்கையான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் மூலம் தயாரிக்கப்படும் உணவுகள் குறைந்துள்ளன. இதனால் தகவல், உயிரித் தொழில்நுட்பத்திற்கு மட்டுமன்றி, நோய்களால் பாதிக்கப்படுவர்களின் தலைநகரமாகவும் பெங்களூரு மாறி வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு, மூத்த தலைமுறையினருக்கு மட்டுமின்றி, இளைய தலைமுறையினருக்கும் நமது முன்னோர்களின் இயற்கை உணவுகளை அறிமுகம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் பெங்களூரு ஜே.பி.நகரின் நம்ம அட்டா வளாகத்தில் ஆக. 28-ஆம் தேதி இயற்கை உணவுத் திருவிழா நடைபெறுகிறது.

இதில் கேழ்வரகு, சாமை, வரகு, குதிரைவாலி உள்ளிட்ட தானியங்களில் செய்யப்பட்ட உணவுகள் இடம்பெறுகின்றன. இதில் மண்டியா இயற்கை

முறையிலான வேளாண் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கத்தின் நிறுவனர் மதுசூதனன், சட்ட மேலவை உறுப்பினர் தாரா அனுராதா, கன்னட வளர்ச்சி ஆணையத்தின் முன்னாள் தலைவர் முக்கிய மந்திரி சந்துரு, நடிகர் சுங்கராஜ், நடிகை பாரதி விஷ்ணுவர்த்தன் உள்ளிட்டோர் கலந்து கொள்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### *மாதுளை சீசன்*

இந்தியாவில் விளையும் மாதுளையில் பெரும்பகுதி மகாராஷ்டிராவில் தான் விளைகிறது. சமஸ்கிருதத்தில் மாதுளம்பழம் தாடிமம் எனப்படுகிறது. இந்த சமஸ்கிருதப் பெயரின் அடிப்படையிலேயே இது தெலுங்கில் 'தானிமா' என்றும் கன்னடத்தில் 'தாலிம்பே' என்றும், மராட்டிய மொழியில் 'டாலிம்பா' என்றும், குஜராத்தில் 'தாடமா' என்றும் அழைக்கப்படுகிறது. லெட்சுமி தேவி உறையும் இடமாக கருதப்படுவதால் மாதுளம்பழம் வட இந்தியாவில் ஐஸ்வர்யத்தின் குறியீடாக கருதப்படுகிறது. மாதுளம்பழத்தில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என 3 வகைகள் உள்ளன. மசக்கைக்கு மருந்தாக தரப்படும் ஆயுர்வேத மருந்திற்கு 'மாதுளங்கா ரசாயனம்' என்றே பெயரிடப்பட்டுள்ளது.

### விதைப்பண்ணையில் தேசிய கண்காணிப்பு குழு ஆய்வு

ஓசூர்: ஓசூர் அடுத்த பேரகப்பள்ளி, லிங்கம்பட்டியில் உள்ள துவரை, நிலக்கடலை விதைப்பண்ணைகளை, தேசிய அளவிலான கண்காணிப்பு குழு ஆய்வு செய்தது. ஓசூர் அடுத்த பேரகப்பள்ளி கிராமத்தில், தேசிய பாதுகாப்பு இயக்க பயிறு வகை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள, துவரை விதைப்பண்ணை மற்றும் பஞ்சாட்சிபுரம் பகுதியில் மேற்கொள்ளப்படும் துவரை பயிர் சாகுபடி, செயல்

விளக்க திடல்கள் மற்றும் 40 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள விதைப்பண்ணை ஆகியவற்றை குழு ஆய்வு செய்தது. ஹைதராபாத் தேசிய எண்ணெய் வித்து வளர்ச்சி இயக்க இயக்குனர் பொன்னுசாமி, கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக முதுநிலை விஞ்ஞானி ஜெயப்பிரகாஷ், முதன்மை விஞ்ஞானி கண்ணன்பாபு, பெங்களூரு ஜி.கே.வி.கே., அகில இந்திய ஒருங்கிணைந்த சிறுதானிய அபிவிருந்தி திட்ட ஒருங்கிணைப்பாளர் நஞ்சாரெட்டி, ஹைதராபாத் இந்திய எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிறுவன முனைவர் ரங்கநாத் ஆகியோர் ஆய்வு செய்தனர். தொடர்ந்து பஞ்சாட்சிபுரம் பகுதி விவசாயிகளுடன் கலந்துரையாடினர். பின்னர், கெலமங்கலம் அடுத்த பிதிரெட்டி கிராமத்தில், 100 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள, ராகி மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப செயல்விளக்க திடல்களை ஆய்வு செய்தனர். பின்னர், ராயக்கோட்டை அடுத்த லிங்கம்பட்டியில், தேசிய எண்ணெய் வித்து மற்றும் எண்ணெய் பனை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நிலக்கடலை விதைப்பண்ணையை பார்வையிட்டனர். மேலும் பயிறு வகை திட்டத்தின் கீழ், ஐந்து விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியத்தில் நீர்பாசன கருவிகளை வழங்கினர்.

## விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகள்: வனத்துறை அறிவிப்பு

ஓசூர்: ஓசூர், சூளகிரி, தேன்கனிக்கோட்டை தாலுகா விவசாயிகளுக்கு, இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளதாக, மாவட்ட வனத்துறை அறிவித்துள்ளது.

இது குறித்து, வனத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட, ஓசூர், சூளகிரி, தேன்கனிக்கோட்டை ஆகிய மூன்று தாலுகாவில், தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் சார்பில், தனியார் நிலங்களில் மரம் நடவு செய்யும் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளது. அதன்படி, விவசாயிகள் தங்களது பட்டா நிலங்களில், விரைவில் பலன் தரக்கூடிய தேக்கு, ஈட்டி, சில்வர்ஓக், மலைவேம்பு, மகாகனி, வேம்பு, புளி, பாதாம், பலா, ஜம்பு நாவல், புங்கன் போன்ற மரப்பயிர்களை, ஒரு ஏக்கருக்கு, 200 வீதம், அதிகப்பட்சமாக 2,500 செடிகள் வரை நடவு செய்து கொள்ளலாம். மரம் நடவு செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள், தங்களது நிலத்தின் பட்டா அல்லது கணினி

சிட்டா நகல், ரேஷன் கார்டு நகல், இரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம், வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல் ஆகியவற்றுடன், சம்பந்தப்பட்ட வன அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். கெலமங்கலம் வனச்சரக அலுவலரை, 99449-91400 என்ற எண்ணிலும், வனவர்களை, 99433-10855, 96266-38166, 94425-35444 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். அதேபோல், ஓசூர் சரக வனவர்களை, 98435-86585, 95971-61534, 94434-34609, 94892-90513, 97864-34977 என்ற எண்ணிலும், கெலமங்கலம் சரக வனவரை, 86955-58503, 97864-34898 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கொடுமுடியில் கொட்டியது மழை

கொடுமுடி: கொடுமுடி பகுதிகளில், நேற்று, 3 மணி நேரம் மழை கொட்டியது. கொடுமுடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளான சிவகிரி, மலையம்பாளையம், காசிபாளையம், ஊஞ்சலூர் உள்ளிட்ட பகுதிகளில் நீண்ட நாட்களாக மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் வருத்தத்தில் இருந்தனர். இந்நிலையில் கொடுமுடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், நேற்று பரவலாக மழை பெய்தது. தூறலாக தொடங்கிய மழை, நேரம் செல்ல செல்ல கனமழையாக உருவெடுத்தது. மாலை, 4.30 மணிக்கு தொடங்கிய மழை, இரவு, 7.30 மணிக்கு ஓய்ந்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கொடுமுடி, சாலைப்புதூர், நொய்யல் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. பள்ளி மாணவர்கள், பொதுமக்கள், வாகன ஓட்டிகள் மழையில் நனைந்தபடியே சென்றனர். ஏறக்குறைய, 3 மணி நேரம் கொட்டிய மழையால், நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## கரூரில் கனமழை: விவசாயிகள் மகிழ்ச்சி

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டத்தில், பல்வேறு இடங்களில் நேற்று மாலை திடீரென கொட்டித் தீர்த்த மழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.கரூர் மாவட்டத்தில், நேற்று மாலை, 5.50 மணி முதல் மாலை 6.30

மணி வரை லேசான மற்றும் ஒரு சில இடங்களில் கனமழை பெய்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். வெப்பம் குறைந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். நெல், கரும்பு, வாழை, வெற்றிலை போன்ற பயிர்கள் ஓரளவு உயிர்பெற வாய்ப்புள்ளது என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். மழை தொடருமானால், விவசாயம் செழிப்பதுடன் கால்நடைகளுக்கும் தீவனங்கள் அதிகளவில் கிடைக்கும்.

## ஏற்காட்டில் 72 மி.மீ., மழை

சேலம்: சேலம் மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு முதல், நேற்று காலை, பல்வேறு பகுதிகளில், பரவலாக மழை பெய்தது. இந்த திடீர் மழையால், வெப்பம் தணிந்து குளிர்ச்சியான தட்பவெப்ப நிலை நிலவியது. மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம்: ஏற்காட்டில் - 72 மி.மீ., பெத்தநாயக்கன்பாளையம் - 48, ஆணைமடுவு - 27, ஆத்தூர் - 23.4, வீரகனூர் - 19, வாழப்பாடி - 16.4, கெங்கவல்லி - 9.2, ஓமலூர் - 9, சேலம் மாநகரம் - 8, கரியகோவில் - 7, காடையாம்பட்டி - 5 மி.மீ., என, மாவட்டம் முழுவதும் 248 மி.மீ., மழை பதிவானது.

## கால்நடைகளுக்கான குடற்புழு நீக்க முகாம்இன்று நடக்கிறது

ராமநாதபுரம்,:ராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான குடற்புழு நீக்க முகாம் இன்று நடக்கிறது.மாவட்டத்தில் 2015--16ல் 4,696 பேருக்கு 18 ஆயிரத்து 784 ஆடுகள், 750 பேருக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்ட கால்நடைகளை நன்றாக பராமரிக்கவும், ஊக்கப்படுத்தவும் பயனாளிகளுக்கு புத்தாண்டு பரிசுகளும் வழங்கப்படுகிறது.

விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், ஆடுகளின் எடையை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் ஆக.,26, 27ம் தேதிகளில் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடக்கிறது. கால்நடை மருந்தகங்களில் இன்று (ஆக.,27) நடைபெறும் முகாம்களில் விலையில்லா, ஆடு, மாடுகள் பெற்றோர் பங்கேற்று பயனடையலாம், என கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

## அரூர் பகுதியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

அரூர்: அரூர் பகுதியில், ஒரு வாரமாக கடும் வெயில் அடித்ததால், பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகி வந்தனர். நேற்று முன்தினம் இரவு, அரூர் மற்றும் கோபிநாதம்பட்டி கூட்ரோடு, அச்சல்வாடி, பேதாதம்பட்டி உள்ளிட்ட, சுற்று வட்டாரப்பகுதிகளில் மழை பெய்தது. மழை காரணமாக குளிர்ந்த காற்றுடன் கூடிய சீதோஷண நிலை நிலவியதால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும், மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ள விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தலைமுடிக்கு ஆரோக்கியம் தரும் நெல்லிக்காய்



தலைமுடி அழகுக்கு அடையாளமாக விளங்குகிறது. இளமையில் ஏற்படும் வழுக்கை, இளநரையால் மன உளைச்சல் ஏற்படுகிறது. பொடுகு, முடிகொட்டுவது உள்ளிட்ட பிரச்னைகளை போக்குவது, முடி கருமையாக வளர்வதற்கான தைலம் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் பார்க்கலாம்.
சின்ன வெங்காயத்தை பயன்படுத்தி முடிகொட்டுவதை தடுக்கும் தைலம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: சின்ன வெங்காயம், நல்லெண்ணெய், ஜடாமாஞ்சில். ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் விடவும். சிறிது ஜடமாஞ்சில், சின்ன வெங்காய பசை சேர்க்கவும். தைலப்பதத்தில் காய்ச்சவும். இதை வடிகட்டி குளிப்பதற்கு முன்பு 15 நிமிடங்கள் ஊறவைத்து தலை குளித்தால் பொடுகு இல்லாமல் இருக்கும்.

முடி கொட்டுவது குறையும். ஜடாமாஞ்சில் மூலிகை நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். இது, முடிவளர்வதற்கு முக்கிய காரணமாக விளங்குகிறது. முடி உதிர்வது, தலையில் அரிப்பு ஏற்பட காரணமாக விளங்கும் பூஞ்சை காளான்களை போக்க கூடியது. பல்வேறு நன்மைகளை கொண்ட வெங்காயம் ரத்த ஓட்டத்தை சீர்படுத்துகிறது. முடிவளர்வதை தூண்டுகிறது. வெள்ளை கரிசலாங்கண்ணியை பயன்படுத்தி கூந்தல் தைலம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வெள்ளை கரிசலாங்கண்ணி, தேங்காய் எண்ணெய், கருஞ்சீரகம்.

50 மில்லி தேங்காய் எண்ணெய், அரை ஸ்பூன் கருஞ்சீரகம், ஒரு ஸ்பூன் வெள்ளை கரிசலாங்கண்ணி இலை பசை சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். இதை ஆறவைத்து வடிகட்டி எடுத்து வைத்து தினமும் தேய்த்து வந்தால், முடி கொட்டுவது நிற்கும், இளநரை மறையும். முடி கருமையாக வளரும். மருத்துவ குணங்களை கொண்ட கரிசலாங்கண்ணியில் வெள்ளை, மஞ்சள் என இருவகை உண்டு. இது உவர்ப்பு தன்மை உடையது. பல்வேறு சத்துக்களை கொண்டது.
நெல்லிக்காயை பயன்படுத்தி தலைமுடி வளர்வதற்கான தைலம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: நெல்லிக்காய், அதிமதுரப்பொடி, தேங்காய் எண்ணெய். துருவிய நெல்லிக்காயுடன், சிறிது அதிமரப்பொடி, தேங்காய் எண்ணெய், பால் விட்டு குழம்பு பதத்தில் காய்ச்சவும்.

இதை ஆறவைத்து தலைக்கு தடவி பின்னர் குளித்தால் முடி கொட்டுவது நிற்கும். தலைமுடி நன்றாக வளரும். தலைமுடி ஆரோக்கியம் அடைகிறது. பொடுகு

இல்லாமல் போகும். நெல்லிக்காய் அற்புதமான தலைமுடி தைலத்தை தருகிறது. நெல்லிக்காய் நோய் நீக்கியாக விளங்குகிறது. இதில் வைட்டமின் சி சத்து உள்ளது. நெல்லிக்காய் பல்வேறு நோய்களை போக்க கூடியது. உடலுக்கு ஆரோக்கியத்தை கொடுக்க கூடியது. ஆயுளை வளர்க்க கூடியது. வேர்வையால் உண்டாகும் துர்நாற்றத்தை போக்கும் மருத்துவத்தை காணலாம். பற்பாடகத்தை பாலில் அரைத்து உடலில் பூசினால் துர்நாற்றம் போகும்.

## அரூர் பகுதியில் சோளம் விளைச்சல் அமோகம்

அரூர்: அரூர் பகுதியில் விவசாயிகள் பயிரிட்டுள்ள சிகப்பு சோளம் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் சிவப்பு சோளத்தை அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர். தர்மபுரி, சோலைக்கொட்டாய் அரூர், கோபிநாதம்பட்டி கூட்ரோடு, மொரப்பூர், கடத்தூர், பொம்மிடி, பாப்பிரெட்டிப்பட்டி, தீர்த்தமலை மற்றும் கம்பைநல்லூர் உள்ளிட்ட பகுதியில் சிகப்பு சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அரூர் பகுதியில் சிகப்பு சோளம் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாராக உள்ளது. இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: இப்பகுதியில் சோளம், கம்பு, ராகி ஆகியவை உணவில் அதிக அளவில் சேர்க்கப்படுகிறது.

சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்டவர்களின் முக்கிய உணவாக இருப்பது ராகி, சோளம், கம்பு உள்ளிட்டவையாகும். எனவே அரிசி உணவுகளை தவிர்த்து விட்டு இயற்கை தானிய உணவுகளுக்கு மக்கள் மாறி வருகின்றனர். எனவே. எளிதில் ஜீரனமாகக்கூடிய சிகப்பு சோளத்தை அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். இந்த சோளத்தட்டை மற்றும் தானியம் கால்நடைகளுக்கும் உணவாக பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர். அன்னை தெரசா பிறந்த நாள் விழா தர்மபுரி: தர்மபுரியில் அன்னை தெரசா பிறந்த நாள் விழாவில் 100 மாணவ, மாணவிகளுக்கு ரத்த பரிசோதனை நடந்தது.

## 3.59 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி மருந்துகள் தயார்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 3.59 லட்சம் கால்நடைகளுக்கும் 3 வார கால சிறப்பு முகாம் மூலம் இலவச கோமாரி தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து கலெக்டா விவேகானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் 3 லட்சத்து 59 ஆயிரத்து 100 பசு மற்றும் எருமைகள் உள்ளன. இவற்றை கோமாரி நோயில் இருந்து காக்கும் வகையில்

தேசிய கோமாரி தடுப்பு திட்டத்தின் கீழ்(11வது சுற்று) 3 லட்சத்து 59 ஆயிரத்து 100 டோஸ் கோமாரி மருந்துகள் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. எனவே. தர்மபுரி மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் வரும் செப்டம்பர் 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை 3 வார காலம் சிறப்பு கோமாரி தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது.

இம் முகாம்களில் 4 மாதத்திற்கு மேற்பட்ட கன்றுகள் உட்பட அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி தடுப்பூசி இலவசமாக வழங்கப்படுகிறது. விடுபட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி வழங்கும் பணி செப்டம்பர் 22ம் தேதி முதல் மேற்கொள்ளப்படும். இதுதொடர்பான விவரங்களுக்கு அருகிலுள்ள கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலையம் ஆகியவற்றை அணுகலாம். எனவே கால்நடை வளர்ப்போர் அனைவரும் தவறாமல் சிறப்பு முகாமின்போது தங்கள் கால்நடைகளுக்கு இலவச கோமாரி தடுப்பூசி வழங்கிட வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மானிய விலையில் விதைகள் வினியோகம்**

கோபி, : பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன் கோட்டை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. விதை கிராமத் திட்டம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் மானிய விலையில் சான்று பெற்ற நெல் விதைகள் வினியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக கோபி, கூகலூர், வெள்ளாங்கோவில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஆதார நிலை மற்றும் சான்று நிலை நெல் விதைகள் தேவையான அளவுகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நாற்று விடும்போது, விதைகளை டிரைக்கோடெர்மா விரிடி ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவிலோ அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் என்ற அளவிலும் கலந்து விதை நேர்த்தி செய்து விதைப்பதால், விதை மூலம் பரவும் நோய்களை ஆரம்பத்திலேயே தடுத்து விடலாம். திருந்திய நெல் சாகுபடி முறையை கையாண்டால் நல்ல மகசூல் கிடைக்கும். மேலும் நெல் இயந்திர நடவு செய்யும் திட்டத்தின் கீழ் எக்டேருக்கு ரூ.5 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

## பீர்ஜேபள்ளியில் விவசாயிகள் சங்க கிளை தொடக்கம்

சூளகிரி : சூளகிரி தாலுகா பீர்ஜேபள்ளியில், தமிழக விவசாயிகள் சங்கம் கிளை தொடக்க விழா நடைபெற்றது. மாநில துணை செயலாளர் கோணப்பன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் கண்ணன் முன்னிலை வகித்தார். துணை செயலாளர் வெங்கடேசன் வாழ்த்துரை வழங்கினார். கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் மகாதேவன், மேற்கு மாவட்ட தலைவர் மாரியப்பன் மற்றும் கிளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அணை கட்டி, 15 ஏரிகளுக்கு நீர் வழங்கி உத்தனப்பள்ளி பகுதிக்கு பாசன வசதியை ஏற்படுத்திட வேண்டும். தமிழக அரசு, விவசாயிகளின் பயிர்கடன் முழுவதுமாக தள்ளுபடி செய்வதுடன், வன விலங்குகளால் சேதமடையும் பயிர்களுக்கும், மனிதர்களுக்கும் உரிய இழப்பீடு வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கரூர் மாவட்டத்தில் 1.50 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் : கலெக்டர் தகவல்

கரூர்: கரூர் மாவட்டத்தில் 1.50லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் தகவல் தெரிவித்துள்ளார். கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கலெக்டர் கோவிந்தராஜ் பேசியது: கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 652.20செமீ. நடப்பு ஆகஸ்டு மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசரி மழையான 248.70 மிமீக்கு இதுவரை 233.74மிமீ மழை கிடைக்கப் பெற்றுள்ளது. நம்பிக்கைதான் வாழ்க்கை என்ற அடிப்படையில் வடகிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்யும் என எதிர்பார்க்கிறோம்.

நடப்பாண்டு கரூர் மாவட்டத்தில் 1.50லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திட தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. உணவு தானிய உற்பத்தி இலக்கினை அடைந்திட ஏதுவாக சான்று பெற்ற நெல் ரக

விதைகளான பிபிடி5204. கோ50, கோ51, ஏடிடி49, ஆகியவை 170 டன், பயறுவகை விதைகளான துவரை கோ(ஆர்ஜி)7, உளுந்து வம்பன்5 ஆகியவை 16,61டன், மேலும் எண்ணைவித்து பயிரான நிலக்கடலையில் கே6 சான்று பெற்ற விதைகள் 23.4 டன் ஆகியவை அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இருப்பில் உள்ள அனைத்து விதைகளும் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அதன்படி தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம், நெல் இயக்ககத்தின் மூலம் கோ50, கோ51, ஏடிடி49 ஆகிய நெல்விதைகள் கிலோ ஒன்றுக்கு ரூ.10மானியத்திலும், பயறு வகை விதைகளான துவரை, உளுந்து, பாசிப்பயறு ஆகியவைகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் பயறுவகை திட்டத்தின்கீழ் ஒரு கிலோவுக்கு ரூ.25 மானியமும் எண்ணைவித்து பயிரான நிலக்கடலைக்கு தேசிய எண்ணை வித்துகள், இயக்கக திட்டத்தின்கீழ கிலோவுக்கு ரூ.25 மானியமும் வழங்கப்படும்.

எனவே விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி சான்றுபெற்ற தரமான விதைகளை பெற்று பயனடையலாம். மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் உரக்கடைகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுகடன் சங்கத்தில் யூரியா 1496 டன், டிஏபி 321டன், பொட்டாஷ் 389டன், கலப்புஉரம் 963டன் இருப்பில் உள்ளது. கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் நடப்பாண்டில் ரூ.62லட்சம் நிதி இலக்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் பெறப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு 40சதவீத மானியத்தில் காய்கறிவிதைகள், பழச்செடிகள் வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

## வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை கூட்டம்

கும்பகோணம்,: கும்பகோணம் வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) ஆலோசனைக்குழு கூட்டம் நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர் லெட்சுமிகாந்தன் தலைமை வகித்தார்.அட்மா திட்ட ஆலோசனைக் குழு தலைவர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் சக்கரவர்த்தி வரவேற்றார்.

கூட்டத்தில், 2016-17 நிதியாண்டு திட்டங்கள் பற்றியும் விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா, வெளிமாநில பயிற்சி, ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை தொழில் நுட்பங்களை கேரளாநீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்று, தெரிந்து கொண்டு வரவும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், சம்பா சாகுபடியில் செய்யும் விவசாயிகள் தண்ணீர் பற்றாக்குறை போக்க நேரடியாக நெல் விதைப்பு மற்றும் இயந்திர நடவு பற்றி தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

கால்நடைத்துறை சார்பில் கால்நடை உதவி மருத்துவர் ஆனந்தகுமார், கால்நடைத்துறையில் உள்ள திட்டங்கள் பற்றியும், கோமாரி நோய் தாக்குதல் மற்றும் நோய் தடுப்பு முறைகள் பற்றியும் பேசினார்.முகாமில் அட்மா திட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முடிவில் அட்மா திட்ட தொழில் நுட்ப வல்லுனர் இளமதி நன்றி கூறினார்

## விதைக்கிராமத் திட்டத்தின் கீழ் நெல், உளுந்து விதைகள் எண்ணெய் வித்துக்கு மானியம்

பட்டுக்கோட்டை,: விதை கிராமத் திட்டத்தின் கீழ் விதை நெல், உளுந்து மற்றும் எண்ணெய் வித்துக்கள் விதைக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது. இது குறித்து திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது.நடப்பு 2016 -17ம் நிதி ஆண்டில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விதை நெல்லுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ 10 மானியமாகவும், விதை உளுந்துக்கு கிலோ ஒன்றுக்கு ரூ 25 மானியமாகவும், எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை மற்றும் எள் விதைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ 12ம் மானியமாக வழங்கப்படுகிறது.

விதை நெல்லை பொறுத்தமட்டில் நடப்பு ஆண்டில் 30 மெ.டன் விநியோகம் மேற்கொள்ள பொருள் இலக்கும், நிதி இலக்காக ரூ 3 லட்சமும், விதை உளுந்து 2 மெ.டன் விநியோகம் மேற்கொள்ள பொருள் இலக்கும், நிதி இலக்காக ரூ 50 ஆயிரமும் எண்ணெய் வித்து விதைகளான நிலக்கடலை மற்றும் எள் விதைகள் விநியோகிக்க 1 மெ.டன் பொருள் இலக்கும், ரூ 12 ஆயிரம் நிதி இலக்கும் பெறப்பட்டுள்ளது.

விதை நெல் ஒரு நபருக்கு ஒரு ஏக்கருக்கு 20 கிலோவும், உளுந்து ஒரு நபருக்கு ஒரு ஏக்கருக்கு 8 கிலோவும் மானிய விலையில் விநியோகிக்கப்படும். எள் ஒரு நபருக்கு ஒரு ஏக்கருக்கு 2 கிலோவும் மானிய விலையில் விநியோகிக்கப்படும். மேற்படி திட்டத்தின் கீழ் விதைகள் பெறும் விவசாயிகள் முறையாக பயிரிட்டு கலவன் நீக்கி, தரமான விதைகளை பகுத்து எடுத்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அதே விதையினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தனியார் நிறுவனங்களிடமிருந்தோ (அல்லது) வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்தோ அதிக விலை கொடுத்து விதைகள் வாங்க வேண்டிய அவசியம் இருக்காது. எனவே விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை தொடர்பு கொண்டு முன்னுரிமை பதிவேட்டில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

**விவசாய கண்காட்சி: 28 வரை நடக்கிறது**

மதுரை, : கோவை யுடிஎப்ஜ சார்பில் யுனைடெட் 'அக்ரி டெக் 2016' விவசாய கண்காட்சி மதுரையில் நேற்று துவங்கியது. கலெக்டர் வீரராகவராவ் கண்காட்சியை துவக்கி வைத்தார். இதில், பண்ணை கருவிகள், நீர்ப்பாசனம், சோலார் பம்புசெட், இயற்கை இடுபொருட்கள், கால்நடை வளர்ப்பு, ஒருங்கிணைந்த பண்ணையம், சொட்டுநீர் பாசனம், நாற்று பண்ணைகள், பாரம்பரிய விதைகள் போன்ற 200க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் இடம்பெற்றுள்ளன. அதிக மகசூல் பெறும் வழிமுறைகள், கால்நடை வளர்ப்பு முறைகள் மற்றும் கண்காட்சியில் கலந்துகொண்ட விவசாயிகளின் சந்தேகங்களுக்கு வேளாண்மை ஆலோசகர்கள் விளக்கம் அளித்தனர். தொடர்ந்து இக்கண்காட்சி ஆக.28ம் தேதி வரை நடைபெறுகிறது. கண்காட்சியை நாள்தோறும் காலை 10 முதல் இரவு 7.30 மணி வரை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நேரில் பார்வையிடலாம். வேளாண்மை துறை உதவி இயக்குனர் பன்னீர்செல்வம், சிண்டிகேட் வங்கி மேலாளர் ஜெயசீலன், அக்ரி டெக் ஒருங்கிணைப்பாளர்கள் மனோஜ்குமார், பாக்கியராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.